# மெட்ரோ ரயில்களில் சுத்திகரிக்கப்பட்ட காற்று

**சென்னை, ஜூலை 1–** சென்னை மெட்ரோ ரயில்களில் சுத்திகரிக்கப்பட்ட காற்று செலுத்தப்படுவதாக, நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாகம் கூறியுள்ளதாவது:

தொற்று தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, சென்னை மெட்ரோ ரயில்கள், ரயில் நிலையங்கள், சுரங்கப் பாதைகள் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் சுகாதாரம் பராமரிக்கப்படுகிறது. மின் தூக்கிகளில், காலால் இயக்கும் வகையில் பொத்தான்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்து இடங்களிலும், சானிடைசர் வைக்கப்பட்டுள்ளது. சமூக இடைவெளியுடன் பயணிக்க, அடையாளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முககவசம் அணியாதவர்களிடம் அபராதம் வசூலிக்கப்படுகிறது.

ரயில் நிலையம், சுரங்கப் பாதைகளில், 24 முதல் 30 டிகிரி செல்ஷியஸ் வெப்பநிலை பராமரிக்கப்படுகிறது.

ரயில்கள், ரயில் நிலையங்களில், சுகாதாரமான காற்றை பராமரிக்கும் வகையில், காற்று வடிப்பான்கள், குளிர்சாதன பெட்டி சுருள்கள், காற்று சீர்படுத்தும் கருவிகள், குளிர்சாதன வலைகள், காற்று செல்லும் பாதைகளில் புற ஊதா கதிர்கள் செலுத்தப்பட்டு, கிருமிகள் அழிக்கப்பட்ட தூய்மையான காற்று, சுழற்சி முறையில் செலுத்தப்படுகிறது.

இவ்வாறு மெட்ரோ நிர்வாகம் கூறியுள்ளது.